[4th July 1962

### டோபிகானா அமைத்தல் (நிதி உதவி)

** 116. கேள்வி.—***திரு. முனு ஆதி :** *கனம் நகராட்சி அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) ஊராட்சி மன்றங்களுக்கும், நகராண்மைக் கழகங்களுக்கும் டோபிகானா அமைக்க அரசாங்கம் உதவித்தொகை அளிக்கிறதா ?*

*(இ) அப்படியானால், 1961-62-ல் எத்தனை ஊராட்சி மன்றங்கள், நகராண்மைக் கழகங்கள் எவ்வளவு தொகை பெற்றுள்ளன ?*

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) Yes, Sir;

(*b*) Loans aggregating Rs. 1,40,000 to three Municipalities and Rs. 7,500 to two panchayats were given in 1961-62.

### அரக்கோணம் நகரசபை ஆணையர் (புகார்கள்)

** 117 கேள்வி.—***திரு. எஸ். ஜே. ராமசாமி :** *கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*அரக்கோணம் நகரசபையின் ஆணையாளர்மீது துண்டுப் பிரசுரமூலமாகவும், மகஜர்மூலமாகவும் வந்த புகார்கள்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?*

THE HON. SRI S. M. A. MAJID : The complaints are being enquired into by the appropriate authorities.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** *கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆணையாளர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேந்தவர். அவர் நமது முதல் அமைச்சரின் ஊருக்கு பக்கத்து ஊர் என்று சொல்லிக்கொண்டு லஞ்சங்கள் வாங்கிக்கொண்டிருக்கிறார். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறது?*

MR. SPEAKER : The hon. Member should simply put the question and cannot make a speech.

(No reply.)

### ஹோமியோபதி வைத்தியமுறை (அங்கீகாரம்)

MR. SPEAKER : Question No. 118.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, the hon. Member who gave notice of this question is not in his seat.

MR. SPEAKER : As the hon. Member who gave notice of question No. 118 is not in his seat the question and answer will be printed in the proceedings.

** 118 கேள்வி.—***திரு. எம். எஸ். செல்வராஜன் :** *கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) ஹோமியோபதி வைத்திய முறையை இந்த அரசாங்கம் அங்கீகரித்துள்ளதா ?*

*(இ) ஹோமியோபதி டாக்டராக பணியாற்றுவதற்கு ரிஜிஸ்ட்ரேஷன் முறை உண்டா ?*